**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10734

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.03.2026

Accepted: 28.03.2026

Published: 01.04.2026

Citation:
Ram Chandhar, S. "Food Names in Palai Kali." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 70–73.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10736

*Corresponding Author:
ezhilyazhini2702@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Food Names in Palai Kali

**S. Ram Chandhar**
*Research Scholar (Part Time), Periyar University, Salem*
*http://orcid.org/0009-0005-4206-2060*

**M. Tamil Maran**
*(Retirement), Periyar University, Salem*

**Abstract**
*In this article, we shall examine the names of foods that are scattered throughout Kalithogai, one of the works in the Eight Anthologies (Ettuthogai), In the Paalai Kali, which deals with separation and the causes of separation, references to food items are extremely rare. It is said that the farmers, who cultivated crops in their own lands, gave away all the food they produced in order to relieve their distress and to protect their people; this is described as the way of the world. From the Sangam period itself, we can understand that sugarcane was cultivated in Tamil lands, as indicated by the line 'Neel Kazhai nivantha poo niram". References are also made to honey and honeybees. It is also stated that it has long been the nature of people that when one approaches another for food, they speak in praise and maintain a cheerful face while receiving it, but their expression changes when the time comes to repay that debt. The poet clearly explains that food and water are essential for human life. The fact that the foods and their names used 2000 years ago are still in use today in Tamil Society is a unique distinction of the Tamil people.*

***Keywords:*** *Sangam Literature, Five Divisions of Land, Food, Tradition, Separation, Water, Farmer.*

**References**

1. Kalithokai — New Century Book House.
2. Kalithokai — Text and Commentary.
3. Puliyur Kesikan Kalithokai — Poompuhar Pathippagam, Dr. M. Rasamanickanar.

# பாலைக் கலியில் உணவுப் பெயர்கள்

***சி. இராம் சந்தர்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

***மோ. தமிழ்மாறன்***
(பணி நிறைவு)
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

***ஆய்வுச் சுருக்கம்***
*எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் விரவி வரும் உணவுப் பெயர்கள் குறித்து இக் கட்டுரையில் காண்போம். பிரிதலும் பிரிதல் நிமித்தமுமான பாலைக்கலியில் அரிதினும் அரிதாகவே உணவு பெயர்கள் காணக்கிடைக்கின்றன. தன்னிடத்துப் பயிரை உண்டாக்கிய உழவர் தம் வருத்தம் நீங்கும்படி ஈன்ற உணவுப் பொருட்களை எல்லாம் கொடுத்து குடிமக்களைப் பாதுகாத்தது உலகம் என்று கூறப்பட்டுள்ளது. சங்க காலம் தொட்டே தமிழ் நிலங்களில் கரும்பு விளைதலை "நீள்கழை நிவந்த பூ நிறம்" என்னும் வரியால் அறிந்து கொள்ளலாம். தேனைக் குறித்தும் தேனீக்களைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது. உணவுக்காக ஒருவரிடம் சென்று அவரைப் புகழ்ந்து பேசி உணவை இரந்து வாங்கும் பொழுது முகம் மலர்ந்திருத்தலும் அப்படி பெற்ற கடனை கொடுக்கும் கால் முகம் மாறுவதும் தொன்று தொட்டு உலகத்தார் இயல்பு என்று கூறுகிறது. உணவும் நீரும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதன என்பதை புலவர் எளிமையாக எடுத்துக் கூறுகிறார். 2000 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டு வந்த உணவுகளும் உணவுப் பெயர்களும் அதே பெயரோடு இன்றளவும் தமிழ் சமூகத்தில் உலாவி வருவது என்பது தமிழரின் தனிச்சிறப்பாகும்.*
***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியங்கள், ஐவகைநிலங்கள், உணவு, மரபு, பிரிதல், நீர், உழவர்*

இரண்டாயிரம் ஆண்டுகள் முற்பட்ட தமிழரின் வாழ்வியலை இன்றும் நாம் அறிந்திட துணைநிற்பது சங்க இலக்கியங்களே. பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் தமிழர் பிரித்திருந்த ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திலும் தமிழர்களுடைய உணவு, மரபு, கொடை, அறம், மறம் என அனைத்தையும் தெள்ளிதின் எடுத்தியம்புகிறது. சங்க இலக்கிய எட்டுத் தொகையுள் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்று புலவர்களால் புகழ்ந்தேத்தும் கலித்தொகையில் முதற்கலியான பாலைக் கலியில் உள்ள 36 பாடல்களில், உணவு மற்றும் உணவுப் பெயர்கள் குறித்த குறிப்புகளைத் தேடித் தொகுக்கப்பட்டதே இக்கட்டுரையாகும்.

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆன பாலைக்கலியில் ஆங்காங்கே சில உணவுப் பெயர்கள் காணக் கிடைக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வழங்கப்பட்டு வந்த உணவுகளும் உணவுப் பெயர்களும் அதே பெயரோடு இன்றளவும் தமிழ்ச் சமூகத்தில் உலாவி வருவது என்பது தமிழர்தம் தனிச் சிறப்பாகும்.

கலித்தொகையில் முதலாவதாக பாடப் பெற்றுள்ளபாலைக்கலியில் பெரும்பாலான பாடல்கள் தலைவன், தலைவி பிரிவைக் குறித்தும் தோழியின் கூற்றாகவும், தலைவியின்

பிரிவுத் துயரையும் பொருள்வயிற் பிரிதலைக் குறித்துமே பாடப் பெற்றுள்ளன. ஆயினும் ஓரிரு இடங்களில் அரிதினும் அரிதாகவே உணவுப் பொருட்கள் மற்றும் அதன் பெயர்கள் சுட்டப்பெறுகின்றன.

#### நிலம்

'பல்வளம் பகர்பு ஊட்டும் பயன் நிலம்' எனும் அடியில் பலவகைப்பட்ட வளங்களையும் உணவுகளையும் விளைவித்துக் கொடுத்து எல்லோரையும் நுகர்விக்கும் பயன்மிக்க நிலம் என்று உணவுப் பொருட்களை நமக்குத் தரும் உழவு நிலம் குறித்து சொல்லப்பட்டுள்ளது.

#### நீர்

மேலும் உயிர்க்கு ஆதாரமான நீரைக் குறித்தும் ஓரிரு இடங்களிலே சொல்லப் பட்டுள்ளது.

'ஊறு நீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய்! நீ ஊடல் வேட்பின் ஆறு நீர் இலசு என அறன் நோக்கிக் கூறுவீர்! எனும் வரிகளில் சுரத்திடைச்செல்லும் போது நீர் உண்ணலை தலைவி வேட்டுக் கேட்பின் வழியிடை நீர் இல என அறத்தைக் கருதி தலைவர் கூறி ஆறுநீர் கழிந்தாற்போல் இளமை கழிந்து போகும் தன்மையுடையது என தலைவி தலைவனுக்கு எடுத்துக் கூறிய பாடலில் பழந்தமிழரின் நீர்த்தேவைகளை ஆற்றுநீர், ஊற்று நீர் என இரண்டும் நிறைவேற்றியதை அறியலாம். மேலும் மற்றொரு பாடலில்

**'பல்பயம் உதவிய பசுமைதீர் அகல் ஞாலம்**
**புல்லிய புனிறு ஓரீஇப் புதுநலம் ஏர் தர'**

எனும் வரிகளில் தன்னிடத்துப் பயிரை உண்டாக்கிய உழவர் தம் வருத்தம் நீங்கும்படி தான் ஈன்ற உணவுப் பொருட்களை எல்லாம் கொடுத்து குடிமக்களை பாதுகாத்தது உலகம் என்று கூறப்பட்டுள்ளது.

**'பயங்கெழு பல் கதிர் பால் போலும்**
**பொழுதோடு'**

எனும் அடிகளில் உலகில் உணவுப் பொருட்கள் விளைதற்குக் காரணமான மதியின் பலகதிர்கள் பால் போல பொழிந்து நிற்கும் இரவுப் பொழுதை நமக்குக் காட்டுகின்றன.

#### கரும்பு

**'நீள்கழை நிவந்த பூ நிறம் வாடத் தூற்றுபு**
**தோள் அதிர்பு அகம் சேர'**

எனும் அடிகளில் நீண்ட கரும்பின் ஓங்கிய பூக்களின் நிறம் கெடும்படியாக காற்றால் தூற்றித் தோள்கள் குளிரால் நடுங்கும்படி நீரால் தூற்றுகின்ற மழை என்று சங்க காலம் தொட்டே நம் வயல்களில் விளைந்து வரும் கரும்பு குறித்து அறியலாம்.

#### தேன்

**'படி உண்பார் நுகர்ச்சி போல் பல்சிளை**
**பிஞிறு ஆர்ப்ப'**

எனும் வரியில் தேனைக் குறித்தும் தேனீக்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### நீர்

**'பல் நீரால் பாய்புனல் பரந்து ஊட்டி,**
**இறந்த பின்**
**சில் நீரால் அறல் வார'**

எனும் அடிகளில் அகன்ற ஆறுகள் அகன்ற உலகிடத்து, உடலிலே நிலைபெற்ற உயிர்கள் அனைத்தும் வாழும்படி பலவாகிய நீரோடு, கால்களின் வழியாக, நீரைத் தாம் எங்கும் பரந்து ஊட்டிப் பாது காத்தன. அந்நீர் வற்றியபின் சிலவாகிய நீரோடு கால்களாலே அறல் உண்டாகும்படி அழகு பெற்றுச் சென்றன என்று கூறுகிறார்.

முன்னொரு நான் தனக்கு உதவியவர் பின்னொரு நாள் வாடி வருந்தும்போது மீண்டும் உதவி செய்பவர் பெருமையாளர் என்றும் அவர் போல ஆற்றில் வெள்ளம் பெருகிய பொழுது நீரை உண்ட மரங்கள் நீர் வற்றிய இளவேனில் காலத்தே கரும்புகள் ஒலிக்க வண்டுகள் ஆரவாரிக்க கொம்புகளின்றும் பலமலர்கள் ஆற்றிலே வரும்படி இனிமை பொருந்திரை என்று

இளவேனிற் காலத்து வருகையை நயம்படி எடுத்துரைக்கிறார்.

**'முன் ஒன்று தமக்கு ஆற்றி முயன்றவர் இறுதிக்கண்**
**பின் ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர் போல்**
**பால் மலர் சினை உக கரும்பு இமர்ந்து வண்டு ஆர்ப்ப**
**இன் அமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினான்'**

**பால்**

'பால் மருள் மருப்பின்' என்ற வரிகள் பால் போன்ற வெள்ளிய மருப்பைக் குறிக்கின்றது. ஆவின்பால் தமிழர் வாழ்வியலோடு நீண்ட நெடிய தொடர்புடையது. வெண்மையாக இருக்கும் அனைத்துக்கும் தமிழர் பாலை ஒப்பிட்டுக் கூறுவது மரபு என்பதை அறிய முடிகின்றது.

உணவுக்காக ஒருவரிடம் சென்று, அவரைப்புகழ்ந்துபேசிஅவ்வுணவை இரந்து வாங்கும்பொழுது முகம் மலர்ந்திருந்தலும் அப்படிப் பெற்ற கடனை திருப்பிக் கொடுக்குங்கால் முகம் மாறுபடுவதும் தொன்றுதொட்டு இவ்வுலகத்தார் இயல்பாகும். புதிதாக நிகழ்வதல்ல என்பதனை,

**'உண் கடன் வழிமொழிந்து**
**இரங்குங்கால் முகனும், தாம்**
**கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்**
**பண்டும் இவ் உலகத்து இயற்கை'**

எனும் அடிகளில் எடுத்துக் கூறியுள்ளார். உணவு மட்டுமல்ல எப்பொருளாயினும் பெறும் போது ஒரு முகமும் தரும்போது ஒரு முகமும் தோன்றுவது மனித இயல்பல்லவா? இவ்வரிகள் மூலம் இரந்து உண்ணும் வழக்கும் தொன்றுதொட்டு இருந்துவருவதை அறிய முடிகிறது. தலைவியைத் தலைவன் பிரிந்து சென்றமையால் பிரிவாற்றாமையால் தவித்த தலைவி உண்ணுதற்குரியவற்றை உண்ண மாட்டேன் என்றும் உயிர் வாழவும் மாட்டேன் என்றும் களவால் கைவிடப் பட்ட மகளிர்நீர்வேட்கையால்தண்ணீரைக் கோலி குடிக்கப்பட்ட பின்னர்த் தூக்கி எறியப்பட்ட, எச்சிலாற் பயன்படாத பனங்குடைகளை ஒப்பர் என்பதை சுட்டிக் காட்டுகின்றாள்.

**'இனியாள்**
**உண்ணலும் உண்ணேன், வாழலும் வாழேன்**
**தோள்நலம் உண்டு துறக்கப்பட்டோர்**
**வேள் நீர் உண்ட குடை ஓரன்னர்'**

எனும் வரிகளில் தலைவனது பிரிவால் தலைவி வருந்தியதை உணவை வெறுத்தமையை சுட்டுகிறது.

உணவும் நீரும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதன என்பதை எளிமையாகப் புலவர் தம் பாடலில் எடுத்தியம்புகிறார். உணவும் நீரும் இல்லாது வாழ்வில்லை என்பதனை உணர வைக்கின்றார்.

தமிழ்ச் சமூகத்தில் தொன்றுதொட்டு வழங்கிவரும் உணவுகளான கரும்பைக் குறித்தும் தேனைக் குறித்தும் பாலைக் கலியில் சிறு குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. நீரும் நிலமும் தமிழன் போற்றிப் பாது காத்த இயற்கை வளங்கள் என்பதைச் சில பாடல்கள் மூலம் அறிந்துகொள்கிறோம். இவை தமிழர் தம் வாழ்வியலோடு தொடர்புடையது என்பது ஒரு சிறு குறிப்பாகத் தமது பாடல்களில் இவற்றைப் புலவர்கள் எடுத்தாள்வதில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

1. கலித்தொகை - நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
2. கலித்தொகை - மூலமும் உரையும், புலியூர்க் கேசிகன்
3. கலித்தொகை - பூம்புகார் பதிப்பகம், டாக்டர் மா. இராசமாணிக்கனார்